

காணை தெற்கு , வடக்கு மற்றும் மத்திய ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் கொசப்பாளையத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி.ராஜா வரவேற்புரையாற்றினார். ஒன்றியப் பெருந்தலைவர் கலைச்செல்வி, ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன் மற்றும் ம.ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், தமா.இளந்திரையன், இராம.கற்பகம், தேன்மொழி, ஜி.இரவிச்சந்திரன், காடுவெட்டி ஏழுமலை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவுநாள்!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணி - புகழஞ்சலி!

## கழகத்தினர் பெருந்திரளாகக் கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் சு. கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சை, ஆக. 4-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி பேரணி மற்றும் புகழஞ்சலி நிகழ்ச்சியில் கழக தோழர்கள் பெருந்திரளாகக் கலந்துகொள்வீர்.

மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி என வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

வருகின்ற 7.8.2024-புதன் கிழமை காலை 8 மணியளவில் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தாராசுரம் ரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலையி லிருந்து தாராசுரம், பைபாஸ் ரோடு கலைஞர் பொன் விழா நுழைவு வாயில் வரை கருப்புச் சட்டை அணிந்து அமைதி பேரணியாகச் சென்று அங்குள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள் தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகி கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், வட்ட, கிளை கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள், முன்னாள்

இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

மேலும் மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்களை திரளாக அழைத்து வர மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்வதுடன் அனைத்துப் பகுதிகளிலும் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தவும் ஏற்பாடு செய்திடுமாறும் வேண்டுகிறேன். இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு. கல்யாணசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் புகழஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை

பட்டுக்கோட்டை, ஆக 4-

தஞ்சை தெற்கு மாவட்டக் கழக தி.மு.க சார்பில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் புகழஞ்சலி குறித்து

மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ குறித்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



வருகின்ற 7.8.2024-புதன் கிழமை காலை 9.00 மணியளவில் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். தலைமை கழக நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள். மாவட்ட கழக நிர்வாகிகள். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:

அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அனைத்து பகுதிகளிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்த உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு-தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், திருவையாறு சட்டமன்ற தொகுதியில் கலைஞர் நூலகத்தை தஞ்சை மத்திய மாவட்ட கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா. இளையராஜா, தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், ஒன்றிய செயலாளர்கள் வை. சிவசங்கரன், கே.எம்.கௌதமன், தஞ்சை மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, திருவையாறு ஒன்றிய குழு தலைவர் கோ.அரசபாகரன், தஞ்சை மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.முகில் வேந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.எஸ்.செந்தமிழ்ச் செல்வன், சி.ஏ.சுரேஷ், எ.ராஜேஷ் கண்ணா, எம்.எஸ்.வெங்கடேசன், எம்.கே.கார்த்திக், இ.உதயநிதி, அரிதரன் மற்றும் மாநகர இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் எஸ்.குளவாய்ப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர் தம்பதியரின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை மூலம் வழங்கப்பட்ட சலவை இயந்திரத்தை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து பயனாளர்களிடம் வழங்கினார். என் நிகழ்வுகளில் ஆலங்குடி பேரூர் செயலாளர் ஆ.பழனி குமார், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி.சிவக்குமார், கே.வி.சுப்பையா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரம் பிரகதீஸ்வரர் திருக் கோவிலில் மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மாமன்னன் இராஜேந்திரசோழன் பிறந்த நாள் ஆடித் திருவாதிரை விழாவினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று முன்தினம் (02.08.2024) துவக்கி வைத்து, உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி!

# சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் - கலைஞர் படத்திற்கு மாலை அணிவிப்பு!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், ஆக. 4-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழினத்தலைவர், முத்தமிழறிஞர், உலக தமிழர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்டு 7ஆம் தேதி புதன்கிழமை. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழிநின்று கழகம் வளர்த்து, ஒட்டு மொத்த தமிழ் சமுதாயத்தையும் தலைநிமிரச் செய்த தலைவரின் நினைவு நாள் ஆகஸ்டு 7.

தமிழ்கூறு நல்லுலகில் வாழும் உள்ளங்களுக்கு உவகையூட்டும் ஒரு மந்திரச்சொல் கலைஞர். 96 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தாலும் தமிழ் என்ற ஒரு சொல் இருக்கும் வரை வாழும் உயிரோட்டமுள்ள ஒரு சொல் கலைஞர்.

தமிழாக, தகவமைக்கும் கதிராக திகழந்து நமக்கு நல் ஒளியாகவும், நயமான வழியாகவும் இருந்தவர் முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். “இருந்தவர்” என்று ‘சொல்வதை விடவும் இப்போதும், எப்போதும் “இருக்கிறார்” என்பதே பொருத்தமானதாக இருக்கும், நம் எண்ணங்களில் இருந்து நொடிப்பொழுதும் விலகாதவர் நம் தலைவர்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு வகித்து இந்திய அளவில் வியப்புடன் தமிழ் நாட்டை திரும்பிப் பார்க்கச் செய்யும் பல திட்டங்களையும், சட்டங்களையும் நிறைவேற்றியவர் நம் ஆருயிர் தலைவர் கலைஞர் அவர்கள் தான். ஏறத்தாழ 50 ஆண்டுகாலம் கழகத் தலைவராக பொறுப்பேற்று இந்திய ஜனநாயக வரலாற்றில் சாதனை படைத்தவர். களம் கண்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றிப் பெற்று இந்திய அரசியலில் எவரும் செய்யாத தனிப் பெறும் சாதனை படைத்து, சட்டமன்ற பணியில் வைர விழா கண்டவர்.

பத்திரிகை, சொற்பொழிவு, இலக்கியம், நாடகம், திரைப்படம், தொலைக்காட்சி என அவர் தொட்டத்துறையில் அனைத்திலும் சிகரமாக உயர்ந்து நின்றார். இத்தனை திறமைகளையும் ஒருங்கிணைத்த அவரது நிர்வாகத் திறமையால் தமிழ் நாடு வளமும் நலமும் பெற்றது.

இன்று இந்திய துணைக் கண்டமே வியந்து போற்றும் நம் “திராவிட மாடல் ” அரசின் திட்டங்களுக்கு அடித்தளம் அமைத்தவர், உழவர் துயர் தீர்க்க நிலச் சீர் திருத்த நில உரிமைச் சட்டம், இலவச மின்சாரம், கூட்டுறவு கடன் தள்ளுபடி, உழவர் சந்தை, ஒழுங்கு முறை விற்பனை கூடம், மகளிர் முன்னேற்றம் காண மகளிர் சுயஉதவிக் குழு, அரசு பணிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, நெசவாளர்களுக்கான பணி பாதுகாப்பு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோரின் கோரிக்கை நிறைவேற்றம், போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்கியது, குடிசை மாற்று வாரியம், கை ரிக்ஷா ஒழிப்பு, கல்வி மருத்துவ கட்டமைப்பு, கிராமங்களுக்கும் சாலை போக்குவரத்து வசதி, புதிய தொழில் திட்டங்கள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், வீடுகள்தோறும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி, அடுப்புடன் இலவச எரிவாயு இணைப்பு, பட்டினி சாவு இல்லாத மாநிலம் ஆகும் வகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி நவீன தமிழ் நாட்டை உருவாக்கிய ஒரு பெரும் சிற்பி, ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என அனைத்து தரப்பினரின் நல் வாழ்வுக்காக “கண்துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர்” நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

தலைவர் கலைஞரின் நினைவை போற்றும் வகையில் ஆகஸ்டு 7ம் நாள் புதன் கிழமை காலை 08.00 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டு, பெரியார் மேம்பாலம் வழியாக அண்ணா பூங்கா அருகில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்படுகிறது. மேலும் சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள சேலம் மாநகரத்தின் அனைத்து கோட்டங்களிலும் உள்ள அனைத்து தெருக்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்தை வைத்து மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்திட வேண்டும் எனவும்.



இதைப் போலவே பேரூரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மற்றும் ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிளைக் கழகங்கள் தோறும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை வைத்து அவரது நினைவை போற்றும் வகையில் மரியாதை செலுத்திட வேண்டும் எனவும்.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள், பொதுக் குழு செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட கழக பிரதிநிதிகள், மாநகர கோட்டக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, அயலக அணி, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் மீது பற்று கொண்ட பொதுமக்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## கழகத்திலிருந்து நிரந்தரமாக நீக்கம்

## தலைமைக் கழக அறிவிப்பு

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுந்தரபாண்டியன் - கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அவர் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் நிரந்தரமாக நீக்கி (Dismiss) வைக்கப்படுகிறார். இவரோடு கழகத்தினர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 02.08.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



நெய்வேலி சட்டமன்ற தொகுதி குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியத்தில் சுமார் 1 கோடியே 55 லட்சம் மதிப்பீட்டில் முன்று இடங்களில் தார்சாலை அமைக்கும் பணியை சபா ராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இதில் மேல் வடக்குத்து காலனியில் இருந்து பொண்ணங்குப்பம் வரை ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை, ஆயிப்பேட்டை கே.எஸ்.கே. நகரில் இருந்து வேகாக்கொல்லை செல்லும் சாலை வரை ரூபாய் 35 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை, மதனகோபாலபுரம் ஊராட்சியில் இருந்து ஆர்.சி காலனி வரை ரூபாய் 70 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியை சபா ராஜேந்திரன் எம்.எல்.ஏ. அந்தந்த பகுதிகளில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர்கள் அஞ்சலை, ராஜ்குமார், துணைத் தலைவர் சடையப்பன், தி.மு.க. நிர்வாகிகள் குணசேகரன், வீர ராமச்சந்திரன், வெங்கடேசன், ஏழுமலை, தண்டபாணி, ராஜ பூபதி, ராமர், வாஜீத், பிச்சையா, அந்தோணிதாஸ், அன்பழகன், துரை, காசிலிங்கம், கோபாலகிருஷ்ணன், முத்துகிருஷ்ணன், செல்வராஜ், குமார், ராஜேந்திரன், சேகர், சரவணன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.